MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN, VANIYAMBADI

(A Project of Sri Marudhar Kesari Jain Trust)

Recognized u/s 2(f) & 12(B) of UGC Act 1956 Re-Accredited with "A" Grade by NAAC (3rd Cycle)

Permanently Affiliated to Thiruvalluvar University An ISO 21001:2018 Certified Institution Supported By DST-FIST

# Jambu Dweep Proclamation – 20.06.2024

## INVITATION



## முதல் இந்திய சுதந்திரப் போர் பிரகடனம்

### (ஜம்புத்தீவுப் பிரகடனம் திருச்சிராப்பள்ளி, ஜூன் *16, 1801*)

இந்தச் சுவரொட்டியைக் காண்போர் யாராயினும் கவனமாகப் படியுங்கள்.

ஜம்புத்தீவு ஜம்பு ராஜ்ஜியம் நாட்டில் வாழுகின்ற அனைத்து இனத்தவருக்கும், உள்நாடுகளைச் சோ்ந்தவா்களுக்கும், பிராமண, சத்திரிய, வைசிய, சூத்திர சாதிகளாகப் பிளவுபட்டிருக்கும் மக்களுக்கும் முகமதியருக்கும், பொதுவான நலன்களைக் கருத்திற்கொண்டு இந்தப் போா் முழக்கம் வெளியிடப்படுகிறது.

மேன்மை தங்கிய நவாப் முகமது அலிகான் முட்டாள்தனமாக உங்களுக்கு மத்தியில் ஐரோப்பியா்களுக்கு இம்மண்ணில் இடமளித்ததால் இம்மண்ணில் கைம்மை நிலை உருவாகிவிட்டது. ஐரோப்பியா்கள் நம்பிக்கைக்கு புறம்பாக நவாப்பினுடைய ஆட்சியுரிமையைக் கைப்பற்றிக் கொண்டனா். உள்நாட்டு மக்களை நாய்களாகக் கருதி அவ்வாறே நடத்துகின்றனா். மேலே சொல்லப்பட்டபடி பலவேறு அடிப்படையில் பிரிந்திருக்கக்கூடிய நீங்கள் உங்களுக்குள் ஒற்றுமையையும் நட்பையும் வளா்த்துக் கொள்ளாமல் ஐரோப்பியா்கள் உங்கள் மத்தியில் ஆடுகின்ற இரட்டை நாடகத்தையும் புரிந்துகொள்ளாமல் உமக்குள் தீராப் பகைமையைப் பெருக்கிக் கொண்டதுடன் ஆட்சியையும் ஆங்கிலேயரிடம் ஒப்படைத்து விட்டீா்கள். அத்தகைய இழி பிறவிகளுடைய கைகளில் சிக்கிக்கொண்ட பகுதிகளில் மக்களுடைய வாழ்க்கை ஏழ்மையடைந்து உண்ணும் உணவுகூட அரிதாகிப் போய்விட்டது. மக்கள் பலவாறான துன்ப, துயரங்களுக்கு ஆட்பட்டபோதிலும் அவற்றிலிருந்து விடுபடுவதற்கான வழிவகைகளையும் அறியாதவா்களாக இருக்கின்றனா். பல ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தாலும் கூட மனிதன் ஒருநாள் மடியப் போவது உறுதி. அவா்கள் ஈட்டக்கூடிய புகழ், சந்திர சூரியா்கள் உள்ளவரை நிலைத்திருக்கும்.ஆகவே இழந்துவிட்ட மரபு உரிமைகளை மீட்டெடுக்கும் விதத்தில் திட்டங்கள் வகுக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டன. அதாவது மேன்மை தங்கிய நவாப் ஆற்காடு சுபாவிற்கும் , வேதிய ராமண்ணா , திருமலை நாயக்கருக்கும் , தஞ்சாவூா் ராஜாவுக்கும் ஏனைய மன்னா்களுக்கும் அவரவா்களுடைய அரசுரிமை முழுமையாக ஒப்படைக்கப்படும். அனைவருக்கும் அவரவா்களுக்கு உரிய உரிமைகள் சமய நம்பிக்கைக்கும் மரபு வழிப்பட்ட பழக்கவழக்கங்களுக்கும் முரணற்ற விதத்தில் முறையாக ஒப்படைக்கப்படவுள்ளன. நவாப்பைச் சாா்ந்து சேவையாற்றுவதுடன் ஐரோப்பியா்கள் தம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டு அதன்மூலம் அவா்களுடைய நிரந்தர மகிழ்ச்சிக்குக் குறைவின்றி வாழலாம். ஐரோப்பியருடைய ஆட்சி முற்றாக அழித்தொழிக்கப்பட்டு விடுவதால் நவாப்பினுடைய ஆட்சியின் கீழ் நாமும் துயரங்களற்று நிம்மதியாக வாழலாம்.

ஆகவே இந்த மண்ணில் வாழும் ஒவ்வொருவரும் தாம் வாழுகின்ற ஊா்களிலும் பாளையங்களிலும் ஆயுதங்களை இறுகப் பற்றிக்கொண்டு ஒன்றிணைந்து அந்த இழிபிறவிகளுடைய பெயரைக்கூட இம்மண்ணில் இல்லாதபடி செய்ய உறுதி பூண வேண்டும். அப்போதுதான் ஏழை எளியவா்கள் உயிா் வாழவே முடியும். எச்சில் வாழ்க்கை வாழுகின்ற நாய்களைப் போல அத்தகைய இழிபிறவிகளுக்குக் கீழ்படிந்து உயிா் சுமந்து திரிய யாரேனும் ஆசைப்படுவாா்களேயானால் அவா்களைக் கருவறுக்க வேண்டும். அந்த இழிபிறவிகள் எத்தகைய சூழ்ச்சிகளால் இங்குள்ளவா்களைத் தம் வசப்படுத்திக் கொண்டு இந்த மண்ணை அடிமைப்படுத்தியுள்ளனா் என்பதை அனைவரும் அறிவீா்கள். ஆகவே பிராமணா்கள், சத்திரியா்கள், வைஸ்யா்கள், சூத்திரா்கள், முகமதியா்கள் என்றெல்லாம் பிளவுண்டு கிடக்கின்ற எம்மக்களே! திசை தவறிப் போய் இந்த இழி பிறவிகளுடைய படையில் சுபேதாா்கள், ஹவில்தாா்கள், நாயக்குகள், சிப்பாய்கள் என்று பட்டங்களைச் சுமந்தலுத்த, ஆயுதமேந்த வல்லவா்களே உங்களுடைய வீரத்தையும் தீரத்தையும் இப்படி வெளிப்படுத்துங்கள். அந்த இழிபிறவி இனத்தவரில் யாரையேனும் எங்கேனும் கண்டால் உடனே வெட்டி வீழ்த்துங்கள்; அந்த இழிபிறவிகளுக்குச் சேவை புரியக்கூடிய எவனும் செத்தால் சொா்க்கத்திற்குச் செல்லப் போவதில்லை என்பதை நானறிவேன். அதனைச் சிந்தித்து செயல்படுத்துங்கள். இதனைக் கருத்திற் கொள்ளாதவா்களின் மீசை மயிா் எனது மறைவிட மயிருக்குச் சமம். அவன் உண்ணும் உணவு கழிக்கப்பட்ட பொருள்; அவனுடைய பெண்டும் பிள்ளைகளும் அவனுக்குரியவா்கள் அல்லா். அவன் கூட்டிக் கொடுத்த அந்த இழிபிறவிகளுக்குப் பிறந்தவா்களாகக் கருதப்படுவா். ஆகையால், நமது நாளங்களில் ஆங்கிலேயருடைய ரத்தத்தால் மாசு படாதோரெல்லாம் ஒன்றிணையுங்கள்.

இந்தச் சுவரொட்டியைப் படிப்போரும் கேட்போரும் தமது நண்பா்களுக்கும் ஏனையோருக்கும் பரப்புங்கள். இதே போன்ற சுவரொட்டிகளைத் தயாரித்துப் பரப்புரை செய்யுங்கள். அவ்வாறு இதில் கண்ட செய்திகளைப் பரப்புரை செய்யாதவன் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்திற்கு ஆளாகி நரகத்தின் அத்தனை சித்திரவதைகளுக்கும் ஆட்படுவான். இந்தப் பணியை மேற்கொள்ளாத முஸ்லீம் பன்றியின் ரத்தத்தைக் குடித்த பாவத்திற்கு ஆளாவான். இந்தச் சுவரொட்டியை இந்தச் சுவரிலிருந்து நீக்க முற்படுபவன் பஞ்சமா பாதகங்களைப் புரிந்த பாவத்திற்கு ஆளாவான். ஒவ்வொருவரும் இதனைப் படித்து நகலெடுத்துக் கொள்ளுங்கள்

இப்படிக்கு மருதுபாண்டியன், பேரரசா்களின் ஊழியன், ஐரோப்பிய இழிபிறவிகளுக்கு ஜென்ம எதிரி.

ஸ்ரீரங்கத்தில் வாழும் சமயகுருக்களுக்கும், பெரியோா்களுக்கும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மருதுபாண்டியன் பாதம் பணிந்த வணக்கங்களை உரித்தாக்குகிறேன். மகாராஜாக்கள் கோட்டைகளைக் கட்டியெழுப்பிப் பாதுகாத்தாா்கள்; களிமண்ணால் முன் முகப்புகளை வடிவமைத்தனா். கோட்டைக் கோவில்களையும், தேவாலயங்களையும் எழுப்பினா் . அத்தகைய மகாராஜாக்களும், மக்களும் இந்த இழிபிறவிகளுடைய ஆட்சியில் வறுமையில் வாடுகிறாா்கள். எப்படியெல்லாமோ வாழ்ந்த நீங்கள் இந்த இழிநிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டீா்கள். எனக்கு உங்களுடைய நல்லாசிகளை வழங்குங்கள்.

ஆதாரம் : Revenue Sundries, 10 July 1801, Vol26 pp.445-455.

**MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN, VANIYAMBADI**

**(A Project of Sri Marudhar Kesari Jain Trust)**

**Recognized u/s 2(f) & 12(B) of UGC Act 1956 Re-Accredited with "A" Grade by NAAC (3rd Cycle)**

**Permanently Affiliated to Thiruvalluvar University An ISO 21001:2018 Certified Institution Supported By DST-FIST**

# REPORT

20.06.2024

வாணியம்பாடி.

முதல் இந்திய சுதந்திரப் போர் பிரகடனம்

அறிக்கை

மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரியில் 20.06.2024 அன்று "ஜம்பு தீவு பிரகடனம்" என்னும் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட "முதல் இந்திய சுதந்திரப் போர் பிரகடனம்" குறித்த தங்களின் விழிப்புணர்வு கடிதம் பெறப்பட்டது. அதன் நகல் மாணவர்களுக்கு வழங்கி அது குறித்த விளக்கமும் விழிப்புணர்வும் அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துக் கொண்டனர். அதற்கான நிழற்படமும் இயக்கப் படமும் தங்களின் மின்னஞ்சலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நன்றி

M. [signature] 20/6/24.

முதல்வர்

PRINCIPAL

Marudhar Kesari Jain College

for Women

Vaniyambadi - 635 751

MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN, VANIYAMBADI

(A Project of Sri Marudhar Kesari Jain Trust)

Recognized u/s 2(f) & 12(B) of UGC Act 1956 Re-Accredited with "A" Grade by NAAC (3rd Cycle)

Permanently Affiliated to Thiruvalluvar University An ISO 21001:2018 Certified Institution Supported By DST-FIST

PHOTO






PRINCIPAL
Marudhar Kesari Jain College
for Women
Vaniyambadi - 635 751